# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரு. 9-40 |
| கொழும்புப்பகுதி: ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, | கால்கலம் | ரு. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭. } யாழ்ப்பாணம்:—குரோதனஞு ஆவணிமீ ௧௬உ; (1925 ஆகஸ்ட் 31) திங்கட்கிழமை. { இலக்கம்—௬௭


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது ணங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு
மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

## ருக்மணிகுக்கர்தான்.

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஒருமணிக்குள் சுவ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 | 27. 33. |

விபர புத்தகம் இனும். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.



## Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOvO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மகத்[illegible]

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அருமையானது!!

—o—

அசல் பாகம்!

பரிக்ஷிக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினுலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

## அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்று" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையின் சில நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த சௌபீர சிற்சுகவின்ப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "மகாசஞ்சீவினி" இதுதானே? என நம் பன்முறையும் புகழ்வார்கள். ஆணுகப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பாலியப் பருவத்திலேயே குருரரோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினுலும் தேஹத்திற்கு சத்காரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன பிருதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினுலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சித்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினுல் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் வெளுப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நரம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹ நாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினுல் ஏற்பட்ட பலவிதமான நோய்களினுலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான் என்று நாம சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்க் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனும்.

| | |
|---|---|
| 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணு 12ம், அரைபாகத்திற்கு அணு 7ம், கால்பாகத்திற்கு அணு 5 பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டிஜ் சார்ஜ் இனும்.

குறிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டாஸ், மோரிஸ் முதலிய [illegible] மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து [illegible] ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும்.

[illegible] விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுறுஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூநாநி வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).

(Q. 63).



[ ESTABLISHED 1609.]

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், [illegible]ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய [illegible]மான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் [illegible]லஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, [illegible]எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் [illegible]தாதுநஷ்டம், சித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாசைதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், [illegible]நரம்புவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த[விர்]த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மரு[ந்]து கிடைப்பது அரிதிலுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனே [illegible] வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டிகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros,
Porto Novo.
(Y: 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.




## மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;

ஆனல் அது சேர்ந்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினுல் தைலம் செய்வது சுலபமே. விலையும் சாசமாகும்.—ஆனல் அது பொதுஜனங்கள் மனதிற்கு ஒப்பாது.

## விட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் இந்தத் துர்நாற்ற முடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினுலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்துமிருக்கிறது.




(Y. 41. c.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன வரு ஆவணி மீ [illegible] திங்கட்கிழமை.

## உடையைப்பற்றி அரசினருக்குத் தடையில்லையாம்.

சென்ற வியாழக்கிழமை கூடிய சட்ட நிருபணசபைக் கூட்டத்திலே கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள் "ஒறப்பனலின்பொருட்டு, உத்தியோகத்தர்களும் பள்ளிக்கூட ஆசிரியர்களும், மாணுக்கர்களும் காற்சட்டை சப்பாத்தின்றி வேட்டிதரித்துக்கொண்டு தங்கள் கடமைகளைப் பார்த்தற்கு அரசினருக்கு எவ்வகையான தடையுமில்லையென அரசினர் ஒரு சுற்றுநிருபம் விடவோண்ணுரா" என்ற வினவை நிகழ்த்தினர். அப்பொழுது அரசாங்க லிகிதர் எழுந்து "அரசினர் உடையைப்பற்றி எவ்வகையான நிபந்தனையும் விதிக்கவில்லையென்ற உண்மை உலகப்பிரசித்தமாதலினல், (கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள் கேட்கிற பிரகாரம்) ஒரு சுற்றுநிருபம் விடுதல் மிகையாகும்" என்று பதில்கூறினர்.

அரசாங்க லிகிதர் கூறிய விடையை நோக்கும்போது, உலகப்பிரசித்தமான ஒரு விஷயத்தை கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள் அறியாது இவ்வாறன ஒரு வினவை நிகழ்த்தினரேனச் சிலர் நினைத்தல் கூடும். விஷயம் அப்படியன்று. கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள் வினவிய வினவும் பிழையன்று; அரசாங்க லிகிதர் கூறிய விடையும் பிழையன்று. அவர் கேட்ட வினவினலும் அதற்கு இவர் சொன்ன விடையினலும் சனங்கள் இதுகாறும் அறியாதிருந்த உண்மையொன்றை இப்பொழுது அறியலாயினர். இலங்கை அரசினர் உடைவிஷயமாக இன்னவகையான உடையைக் கொள்ளல்வேண்டும், இன்னவகையான உடையைத் தள்ளல்வேண்டுமென்று எவ்வகையான பிரமாணத்தையும் எக்காலத்திலாயினுஞ் செய்ததாகத் தெரியவில்லை. இலங்கை அரசாங்கத்தில் புகைரதப்பகுதி தபால் தந்திப்பகுதி வித்தியாபகுதி முதலிய பல பிரிவுகளிருக்கின்றனவல்லவா? இப்பகுதிகளின் தலைமை உத்தியோகம் வகித்திருக்குந் தெய்வங்கட்குத் தாங்கள் தாங்கள் நினைத்தபடி சில கருமங்களைச் செய்தற்கும் அதிகாரமுண்டுபோற் காணப்படுகின்றது. இத்தலைமை உத்தியோகத்தர்கள் தங்கள் அதிகாரத்தைக்கொண்டு சிற்சிலசமையங்களில் சனங்கட்கு வசதியீனமான சில நிபந்தனைகளை விதித்துவிடுகின்றனர். உதாரணமாகச் சொல்லுகில், ஞாயிற்றுக்கிழமைகளிலே பள்ளிக்கூடம் கூடவோண்ணுதென ஒரு பிரமாணத்தை இலங்கை அரசினர் விதிக்கவில்லை. இப்பொழுதுள்ள வித்தியாதரிசியோ-இன்றேல் தலைமை வித்தியாதரிசிகளிலொருவரோ-யாரென்பது நன்றாய்த்தெரியவில்லை-ஞாயிற்றுக்கிழமைகளிற் பள்ளிக்கூடம் வைத்து நடத்தவோண்ணுதென ஒரு பிரமாணத்தை விதித்து அதனற் சைவர்கட்குப் பெரும் வசதியீனங்களை விளைத்தனர்.

இவ்வாறே புகைரதப்பகுதித் தலைவரும் தபாற்பகுதித் தலைவரும் தங்களுக்குக்கீழுள்ள உத்தியோகத்தர்கள் காற்சட்டை சப்பாத்துத் தரித்துக்கொண்டு வருதல்வேண்டு மெனப் பிரமாணங்கள் விதித்துவிட்டனர். கொழும்பு அரசாங்க கல்லூரி சர்வகலாசாலைக் கல்லூரி என்னும் இவ்வித்தியா ஸ்தாபனங்களின் அதிகாரிகள் தங்கள் வித்தியாசாலைகளிற் கல்விபயிற்றும் ஆசிரியர்களும் கல்வி பயிலும் மாணுக்கர்களும் காற்சட்டை சப்பாத்து அணிந்துகொண்டே கல்லூரிக்குச் செல்லுதல்வேண்டுமெனப் பிரமாணஞ்செய்துவிட்டார்கள். கொழும்பிலுள்ள உத்தியோகஸ்தானம் ஒன்றிற் கடமை பார்த்த உத்தியோகத்தர் ஒருவர் சுகவீனங்காரணமாகத் தம்மை வேறிடத்துக்கு மாற்றி விடும்பொருட்டுத் தமது தலைவருக்கு மனுப்பண்ணினர். அம்மனு ஒருவாறு அங்கீகரிக்கப்பட்டபின் அவரை நேரிற்காண்பதற்கு அந்தத் தலைவர் விரும்பினர். உத்தியோகத்தர் அவர்முன் சென்றபோது தலைவர் அவரைப் பாதாதிகேசம் வரையும் சிறிதுநேரம் இமைகொட்டாது பார்த்தார். அவரது முகத்திலும் அதிக கோபக்குறி காணப்பட்டது. கதர் வேட்டி சால்வை உட்சட்டை சுதேசதேற்

யாழ்ப்பாண ப்பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்

எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்

தயவுசெய்து

தெரிவு செய்யுங்கள்.

(Q. 66)

முதலானவற்றை அவர் அணிந்திருந்தமையே தலைவரின் கோபத்துக்குக் காரணமாகும். "நீர் ஒரு தேசியவாதியா; இந்திய தேசத்தலைவரைப் பின்பற்றுபவரா; நீர் காந்தியின் இயக்கத்தைச் சேர்ந்தவரா" என்றும் இன்னேரன்ன அனுவசியகமான பலகேள்விகளையும் கேட்டார். சுதேச உடைதரித்தகாரணத்தால் அவரைத்தண்டிக்கமுயன்றதலைவர் வேறொருமார்க்கமின்றி அவருடையமனுவை நிராகரித்து அவருக்குப் பதிலாக வேறொருவருக்கு உத்தியோகமாற்றம் செய்தனர். நமது நாட்டினர் தேசீய உடைதரிக்கின் மேல்நாட்டுப்பருத்திக்கைத்தொழில் வியாபாரம் என்னும் இவை குன்றுமென்பதும் அதனுல் மேல்நாட்டு வாழ்க்கை அழியுமென்பதும் இத்தலைவருடைய உள்ளக்கிடக்கையாகும். இந்த விஷயமாக லோட்பேர்க்கன்கெட் ஒருசந்தர்ப்பத்தில் இங்கிலாந்தின் வாழ்வைப்பற்றி வெளியிட்ட கூற்றை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம்

ஆதலால் ஒவ்வொரு பகுதி உத்தியோகத் தலைமைத்தெய்வங்கள் விதித்த இப்பிரமாணங்கள் இலகுவில் அகற்றத்தக்கனவல்ல. இவற்றை அகற்றுவதற்கு, கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள்போன்ற சனப்பிரதிநிதிகளின் துணையும், அரசினரின் சகாயமும், ஊரவர்களின் ஒற்றுமையும் ஆவசியகம் வேண்டும். கீழ் உத்தியோகத்தர்களாயுள்ளவர்களுள் ஒருவர் இருவர் காற்சட்டை சப்பாத்துத் தொப்பி அணிதலை விடுத்துப் புதிதாகச் சாதிய உடையை அணிந்துகொண்டுசென்றுல், அதனைக்கண்டு மேலுத்தியோகத்தராயுள்ளார் சிலர், குடையைக்கண்டு எருத்துமாடு வெருட்சிகொள்வதுபோல வெருட்சிகொண்டு அக்கீழுத்தியோகத்தர்கட்குச் சில வசதியீனங்களைச் செய்ய நினைப்பர். ஆதலினலே தமிழர் சிங்களவர் இஸ்லாமானவர் என்னும் இவ்வகுப்பினருட் கீழுத்தியோகத்தர்களாயிருப்பவர்கள்பலர் ஒருங்கு சேர்ந்து யோசித்து ஏககாலத்திற்றனே தத்தஞ்சாதிக்குரிய உடைகளைத் தரித்துக்கொண்டு உத்தியோகஸ்தானத்திற்குச் செல்லுதல் வேண்டும். அப்படிச் செல்லும்போது, மேலுத்தியோகத்தர்கள் கண்களுக்கு எங்கள்சாதிய உடை சகசமாகி வெருட்சியைத் தாராதொழியும்.

மேலும் யாம், முன்னர்க்கூறிய பிரகாரம் இந்துக்கல்லூரிகளிலும் சைவகலாசாலைகளிலும் கல்விபயிற்றும் ஆசிரியர்களாயுள்ளாரெல்லாரும் இனிமேற் சாதிய உடையே தரித்துச்செல்லுதல்வேண்டும்.

## தம்பிரான் தோழரும் ஏயர்கோன் கலிக்காமநாயனரும்.

எமது தம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திநாயனர் பரவையாரது திருமாளிகையில் வசித்துவருவாராயினர். நாயனர் பரவையார் கொண்டுள்ள கோபத்தைத் தணிக்கும்பொருட்டுச் சிவபெருமானை வேண்டினமையும், எம்பெருமான் அதற்கிசைந்து பரவையாரிடம் ஒருமுறைக் கிருமுறை தூது சென்றமையும் பிறவும் எங்கும் பிரஸ்தாபமாயின. இதனைக் கேள்விப்பட்டோர் சிலர் இது முன்னெருபோதும் உலகில் நிகழாத விநோத சம்பவமென்றனர். சிலர் இந்த அற்ப விஷயத்தையிட்டு எமது பரமபிதாவாகிய சிவபெருமானை ஒரு பெண்ணிடம் தூதனுப்புதல் தக்கதன்றென்றனர். சிலர் மெய்யடியாருள் வைத்தெண்ணப்படும் இந்த உத்தமர் இங்ஙனஞ் செய்தல் அடாது என்றனர். சிலர் அவரவர் உள்ளக்கிடக்கையை வள்ளல் அறிவரென்றனர். சிலர் "ஆட்பாலவர்க்கு அருள்செய்யும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகின் அளவில்லை" என்றனர். இங்ஙனம் இந்த நூதன சம்பவத்தையிட்டு உலகம் பலவிதமாகப் பேசத் தொடங்கியது.

விஷயமிவ்வாறாக, திருப்பெருமங்கலம் என்னும் ஊரிலே ஏயர்கோன்கலிக்காமரென்னும் மெய்யடியாரொருவருளர். அவர் விபூதி உருத்திராக்கம் முதலான சிவசின்னங்களை அத்தியந்த ஆவலுடன் தரிப்பவர்; ஸ்ரீபஞ்சாட்சரத்தை இடையீடின்றிச் செபிப்பவர்; உத்தம சிவபூஜாதுரந்தரர்; சைவநிந்தை சிவத்துரோகம் முதலியன செய்வோரைக் காணின் சிறிதும் சகிக்கும் ஆற்றலில்லாதவர். எமது சமயகுரவர் சிவபெருமானைப் பரவையாரிடம் தூதனுப்பிய சமாசாரம் இந்த மெய்யடியாருடைய செவிகளுக்கும் எட்டியது. கலிக்காமநாயனர் இடிகேட்ட சர்ப்பம்போல அயர்ந்தார்; நெட்டுயிர்த்தார்; நிலமிசை வீழ்ந்தார்; தலைமிசை மோதினர்; சிறிதுவேளை தியங்கினர்; அதிக கோபங்கொண்டார்; இத்தருணத்தில் என்னதான் செய்வதென்பது அவருக்குப் புலப்படவில்லை. "எங்கும் நிறைந்த-எல்லாம் வல்ல-எல்லாமான அந்தப் பரம்பொருளை ஓர் பெண்ணிடம் தூதாக விடுத்த இந்தச் சுந்தரனும் ஓர் தொண்டனமோ? அப்பரம்பொருள் இவனைத் தடுத்தாட்கொண்டுமென்? அவனுக்குத் தோழராகியுமென்? அவர் பெருமையைத் தொண்டனென்று சொல்லப்படும் இவன் சிறிதேனு மறிந்தானல்லன். அந்த அரியும் அமரரும் அரவிந்தமலரிற் பிரமரும் முனிவரும் பிறரும் இன்னமும் தேடிக் காண்டற்கரிய திருவடியென்பதை இச்சுந்தரன் சிறிதுஞ் சிந்தித்தானல்லன். இவன் செய்துள்ள இந்த அடாத தூர்க்கருமத்தைப்பற்றிக் கேள்விப்பட்டும் இன்னமும் யான் உயிர்தரித்திருப்பேனு? அவனை [illegible] கண்ணிற் காண்பேனுயின் அவனது உயிரைக் கவர்ந்தன்றிச் சிறிதும் தாமேன்; இது சத்தியம்" எனக் கலிக்காமநாயனர் கூறி அன்று முதலாக ஆறுத் துயர்க்கடலுள் மூழ்கியிருந்தார்.

இங்ஙனம் கலிக்காமநாயனர் கடுஞ்சினமுற்றிருப்பதை எமது சமயகுரவர் அடியார்கள் கூறக் கேட்டறிந்தார். அவர் கலிக்காமநாயனர் தம்மீது தீராக்கோபமுடையரா யிருப்பதுபற்றிப் பெரிதும் அஞ்சினர்; தம்மைத் தடுத்தாட்கொண்ட பரம்பொருளே இந்த ஆபத்தையும் நீக்கியருளவேண்டுமென்று சிவபரஞ்சுடரைப் பிரார்த்தித்தார். இந்த மெய்யடியார்கள் இருவரும் சிவபெருமானுக்கு மீளா அடிமைத்தொண்டு பூண்டொழுகுவோராவர். இருவரும் அனுசரித்துள்ள கொள்கையில் உண்டான பேதமே இவ்வித பகைமை நேர்ந்தமைக்குக் காரணமாகும். இப்பகையைப் போக்கி இருவரையும் ஐக்கியப்படுத்தவேண்டுமென எமது ஆன்மநாயகர் திருவுள்ளம் பற்றினர். எம்பிரான் ஆங்கோர் திருவிளையாடல் புரியவேண்டிக் கலிக்காமநாயனரிடத்திலே கொடிய சூலைநோயை விடுத்தார். கலிக்காமநாயனர் அக்கொடுநோயைச் சகிக்கலாற்றுதவராய்ச் சிவபெருமானுடைய உபயதிருவடிகளுக்கு முறையிட்டார். சிவபிரான் "இந்நோய் சுந்தரன் வந்தாலன்றித் தீராது" என அருளிச்செய்தார். ஏயர்கோன் "தேவரீரை ஒரு பெண்பொருட்டுத் தூதாக விடுத்த கொடியனாகிய அந்தச் சுந்தரனுல் எனது நோய் நீங்குவதிலும் பார்க்க அந்நோய்க்கிரையாகி நான் இறந்துவிடுவதே சிறந்தது" என்றார். எமது கயிலாயபதி தமது தோழரிடம் எழுந்தருளி "எமது ஏவலாற் கலிக்காமனை வருத்தும் சூலைநோயை நீ போய்த் தணிக்குதி" என அருளிச்செய்தார். எமது சமயகுரவர் சிவாஞ்ஞையின் வண்ணம் கலிக்காமநாயனருடைய இல்லத்துக்குச் சென்று தமது வரவை அவருக்குத் தெரிவித்தார்.

சிவபூசையில் ஈடுபட்டிருந்த நாயனர் எமது சமயகுரவரது வரவையறிந்து அவரைக் காணுவதற்குமுன் உயிரை விடத்துணிந்து உடைவாளாற் சூலையை வயிற்றொடும் கிழித்து உயிர் துறந்தார். இதனைக் கண்ணுற்ற சுந்தரமூர்த்திநாயனர் 'என்பொருட்டு இந்த மெய்யடியார் தற்கொலை செய்ய நேர்ந்தமையினுல் நானும் இவர்போல இறத்தலே முறைமையுங் கடமையும்" எனப் புகன்று தமது உடைவாளை எடுத்து மார்பிற் குத்தப் புகுந்தார். பரமகருணுநிதியாகிய சிவபெருமானுடைய திருவருளினலே இறந்துகிடந்த கலிக்காமநாயனர் உயிர்பெற்றெழுந்தார்; சுந்தரமூர்த்திநாயனர் உடைவாளாற் றமது உடலம்பிழக்கப் புகுவதைக் கண்டார்; சிறிதும் தாமதது விரைந்தோடி அவரது கரததைப் பற்றினர். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி அத்தியந்த நண்புடையராயினர்கள்.

(நாயகன் இரண்டாவதாக ஒரு பெண்ணை மனைவியாகக் கொள்ளுமிடத்து முதலாம் மனைவிக்கு அந்நாயகன்மீது மனஸ்தாபம் ஏற்படுதல் சகசமாகும். இவ்வியல்புபற்றியே பரவையாருக்கும் சுந்தரமூர்த்திநாயனருக்கு மிடையிற் பிழவுண்டாயது. எமது நாயனர் குறையிரந்து வேண்டிக்கொண்டமையினுலும், அவரது துயரைக் களைதல் எம்பெருமான்மீது பொறுத்த கடனுதலினுலும் சிவபெருமான் சுந்தரமூர்த்திநாயனருக்காகப் பரவையார் திருமாளிகைக்குத் தூதுசென்றருளினர். இதனையறியாது கலிக்காமநாயனர் எமது சமயகுரவர்மீது தோஷம் சுமத்தலானர். திருவருள வசத்தால் அவரைச் சூலைநோய் பிடித்தது. அது காரணமாகத தம்மைத தாமே கொலைசெய்யவும் நேர்ந்தது. தாம் அவ்வாறு தற்கொலைசெய்தபின்னர் உயிர்பெற்றெழுந்தமை அவர் உத்தம சிவபூஜாதுரந்தரராக விளங்கியமையினுலும் மெய்யடியாருள் ஒருவராக வைத்து எண்ணப்பட்டமையினுலுமேயாம். எமது சமயகுரவரும் இந்த மெய்யடியார் கொண்டுள்ள வெகுளி காரணமாகத தமது தவறை உணர்ந்தனர். ஆயினும் அக்குற்றத்தின் பெறுபேறுக அவர் மனமலருந்தவும் தற்கொலை செய்ய முயலவும் நேர்ந்தது. சாக்ஷாத்பரம்பொருளாகிய சிவபெருமானுல் எமது சமயாசாரியர் தடுத்து ஆண்டு அடிமைகொள்ளப்பெற்ற உத்தமராதலின அவர் தம்மைத்தாமே கொலைசெய்து கொள்ளுமுன் திருவருள்வசத்தாற் றடுக்கப்பெற்றுர். இந்த இருவரும் மெய்யடியார்களாதலின் பரம்பொருளாகிய சிவபெருமான் அவரவர் செய்துகொண்ட குற்றத்திற்குத் தக்கவாறு தண்டித்து இருவரையும் ஒற்றுமைப்படுத்திப் பூரண கிருபையையும் பாலித்தருளினரென்பதாம்.)

அதன்பின் எமது சமயாசாரியர் கலிக்காமநாயனருடன் திருப்புன்கூருக்குச் சென்று சுவாமி தரிசனம்செய்து "அந்தணாளன் அடைக்கலம்" என்னும் சொற்றொடரையுடைய தேவாரத் திருப்பதிகம் பாடியருளினர். அவர் பின்னரும் திருவாரூரை அடைந்தார். ஏயர்கோன் கலிக்காமநாயனர் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு அரிதாக அவரைப் பிரிந்து சென்று தமது ஜெநநபூமியாகிய திருப்பெருமங்கலத்தை யடைந்து அங்கு இனிது வாழ்வாராயினர்.

## புகைரதக்காவலரின் அக்கிரமம்.

கொழும்பிலிருந்து தலைமன்னரிப் புகைரத மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்ற இரு அமெரிக்க பெண்கள் இருந்த வண்டிக்குள் ஒரு புகைரத உபகாவலர் பலமுறை புகுந்து கஷ்டம் விளைத்த சமாசாரத்தை இற்றைக்குச்சிலவாரங்களுக்குமுன் பிரசுரித்துள்ளோம். பின்னரும் சென்னையிலுள்ள இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் தான்பிரயாணஞ்செய்த வண்டியிற் பிரயாணிகள் அதிகமாகவிருப்பதுகண்டு ஒரு புகைரதஸ்தானத்திலிறங்கி அடுத்த வண்டிகளில் வசதியாகப் பிரயாணம் செய்யக்கூடுமோ என்றுபார்த்தார். இரண்டு வண்டிகள் பிரயாணிகள் ஒருவருமில்லாதிருப்பதைக்கண்டு அவர் உபகாவலரிடம்சென்று தான் வசதியாகப் பிரயாணம் செய்வதற்கு அந்தவண்டிகளில் ஒன்றைத் திறந்துவிடும்படிகேட்டார். உடனே உபகாவலருக்குக் கோபம் மூண்டுவிட்டது. அவர் இழிவான சொற்களால் அந்த உத்தியோகத்தரை விளித்து அவ்விதம்செய்ய மறுத்துச்சென்றுர். பிரயாணி பின்னரும் தான் முன்னிருந்த வண்டிக்குட்சென்று அதிக வசதிக்குறைவுடன் ஒருவாறு பயணத்தை முடித்தனர். உபகாவலர் அப்பொழுது மதுபானத்தில் மூழ்கியிருந்தமைபற்றியும் நீதியீனமாய் நடந்தமைபற்றியும் இரகசிய உத்தியோகத்தர் இலங்கைப் புகைரதத்தலைவருக்கு முறையிட்டிருக்கின்றனர். புகைரதப்பகுதியிலுள்ள இந்த உத்தியோகத்தர் பிரயாணிகளுடன் நடந்து கொள்ளும் நீதியீனத்தைப்பற்றிப் பல முறைகளிலும் எழுதியுள்ளோம். இவர்கள் திருந்துவதாகக்காணேம்.

## ஆற்றில் மூழ்கி இறந்தமை.

சென்ற வெள்ளிக்கிழமை பொலிஸ் வாலிபனொருவன் பாணந்துறை யாற்றிலே நீராடச் சென்றபோது நீரோட்டத்தினால் அள்ளுண்டு மாண்டுபோயினன்.

## பெல்ஜியதேச அரசரும் அரசியும்.

வருகிறசெப்டெம்பர்மீ 11உ தொடக்கம் அக்டோபர்மீ 8உ வரையும் பெல்ஜியதேச அரசரும் அரசியும் இந்தியாவிலே சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். அவர்கள் ஆக்ரா, டில்லி, லக்னோ, காசி, டார்ஜிலிங் முதலான பிரதான நகரங்களைத் தரிசிப்பார்கள்.

## கோலாலம்பூர்ச் சைவசித்தாந்த சங்கம்.

மேற்படி சங்கமண்டபத்தில் நிகழும் குரோதன வருடம் ஆடிமீ 28உ செவ்வாய்க்கிழமை மாலை சுந்தரமூர்த்திநாயனார் திவ்விய சரித்திரம் திருவாளர் கோவிந்தராச முதலியார் அவர்களால் பிரசங்கஞ் செய்யப்பட்டது. கடித.

## சச்சிதானந்த ராஜயோகிகளின் சற்பிரசங்கம்.

சென்றசனிக்கிழமை சச்சிதானந்த ராஜயோகிகள் வெள்ளவத்தைத் திருக்குறட் பயிற்சிக்கழகத்தாருடைய வேண்டுகோட்கிணங்கி, மதுரைச் சோமசுந்தரக்கடவுள் வைகைநதிக்கரையில் மண் சுமந்த திருவிளையாடலைப் பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்கஞ் செய்தார்கள்.

## ஆயிரந்தேங்காய் திருடிய ஆறென்மென்டிஸ்

குருநாக்கலிலே ஆறென்மென்டிஸ் என்னும் ஓர் வியாபாரியும், இன்னும் மூவருமாக, தோட்டம் ஒன்றிலே ஆயிரந்தேங்காய்களைத் திருடியமைக்காக நீதிஸ்தலத்திலே விசாரணை செய்யப்பட்டு, ஆறென் மென்டிஸ் என்பவர் மூன்று மாசக்கடூழியச்சிறை விதிக்கப்பட்டனர். மற்றையோர் 50 ரூபா விகிதம் அபராதம் விதிக்கப்பட்டனர்.

## மதவெறி கொண்ட கூட்டத்தார்.

தென்னாபிரிக்காவிலே மதவெறிகொண்ட ஒரு கூட்டத்தினர் அங்குள்ள சனங்களைத் தமது மதத்திற் சேரும்பொருட்டு வற்புறுத்துகின்றனர் அவர்களுடைய கேள்விக்குடன்படாது மறுத்தவர்களைக் கொலை செய்கின்றனர். ஒரு கிராமத்தில் வசித்த ஐம்பது பேர் இதன்பொருட்டுக் கொலைசெய்யப்பட்டார்கள். பலர் காயப்பட்டனர். மதவெறிகொண்ட இக்கூட்டத்தினரை அடக்குவதற்கு ஒரு சேனை அனுப்பப்பட்டிருக்கிறது.

## விளையாட்டு வினையாய் முடிந்தமை.

தெகியப்பிட்டிப்புகையிரதஸ்தானத்திலே உத்தியோகம் வகிக்கும் ஒருவரின் துப்பாக்கியொன்றை, அங்குவேலையாயிருக்கும் இன்னுமொருவர் எடுத்து அயலில் நின்ற செட்டிப்பையன் ஒருவனுக்கு நேரே வேடிக்கையாக இலக்குப்பிடித்தார். இவருக்குத் துப்பாக்கியுள் மருந்திடப்பட்டிருந்தமை தெரியாது. துப்பாக்கியில் லுத்த தட்டுப்பட்டமையினால் வெடித்துச் செட்டிப்பையனின் முகத்தைச் சின்னாபின்னப்படுத்திவிட்டது.

## தலைவரி.

நம் அரசினர் இலங்கையில் அறவிட்டுவருந் தலைவரிப்பணத்தை முற்றுந் தெருக்களுக்காகச் செலவழித்துவருகின்றார்கள் என்பது பொதுவான விளக்கம். இப்போது வெளிப்படுகிறபடி அந்த விளக்கம் பிழையெனக் காணப்படுகிறது. இத்தவரியின் அரைவாசியையும் அரசினர் பொதுச் செலவுகளுக்காக விடுகிறார்கள். எஞ்சிய மூன்றிலொருபங்கை வாடிவீடுகளுக்காகவும், இரண்டுபங்கை மாத்திரமே குறுக்குறோட்டுகளுக்காகவுஞ் செலவழிக்கின்றாராம். —உ-தா-தை.

## மந்திர வசியமுள்ள ஆசிரியருக்கு ஒரு வருடக் கடுஞ்சிறை.

சொக்கம்பிட்டியிலேயுள்ள வித்தியாசாலை ஒன்றில் ஆசிரியராகும் சருணலயதேவன் என்னுமொருவர் அங்குள்ள இரு பெண்களை மந்திரத்தால் வசியப்படுத்திச் சிறுகுதற்பட்டி என்னுமிடத்துக்கு அழைத்துச் சென்று அங்கு வசித்தனரெனத் திருநெல்வேலி ஜில்லாக் கோட்டில் விசாரணை செய்யப்பட்டு ஒரு வருடக் கடூழியச் சிறை விதிக்கப்பெற்றார். இவ்வழக்கு விசாரணை முடிந்தவுடன் ஒரு பெண் கிணற்றில் வீழ்ந்து இறந்தனளென லோகோபகாரி கூறுகின்றது.

## இலங்கைத்தேசாதிபதி.

இப்பொழுது எமது தேசாதிபதியாகக் கடமைபார்க்கும் மிஸ்டர் ஸிசில் கிளமென்றி அவர்கள் ஹொங் ஹொங்குக்கு வருகிற அக்டோபர்மீ 14உ செல்வார். தொடுவாய் இராச்சியப்பகுதியில் தனாதிகாரியாகவிருக்கும் மிஸ்டர் பொன்றினி அவர்கள் எமது இராசமாலிகைப் பதவிக்கு நியமனம் பெற்றிருக்கின்றனர். ஆயினும் அப்பதவியைக் கையேற்பதற்கு அவர் உடன்படவில்லையென்று சொல்லப்படுகிறது. எமது புதிய தேசாதிபதியாகிய சேர் கியூஸ் கிளிபோட் அவர்கள் வருகிற நவம்பர்மீ 21உ இங்கு வந்துசேர்வார். இப்பொழுது இராசமாலிகருக்காகக் கடமைபார்க்கும் கௌரவ மிஸ்டர் சு. பி. அலெக்சாண்டரவர்கள் இடையிலுள்ள ஐந்துவாரமும் தேசாதிபதியாகக் கடமை பார்ப்பாரெனச் சொல்லப்படுகிறது.

## அமெரிக்க சிறையாளர் மாயமாய் மறைந்தமை.

எச். மாக் வில்லியம், ஈ. எல். ஹில் என்னும் அமெரிக்கர் இருவர் சிலநாட்களுக்குமுன் பாஞ்சாலநாட்டிலே சிலரைச் சருவிக் காயப்படுத்தினார்களெனக் குற்றஞ் சாட்டப்பட்டு முறையே ஆறு மாதம் மூன்றுமாதக் கடூழியச் சிறைவிதிக்கப்பெற்றார்கள். எதிரிகள் உயர்நீதிமன்றத்துக்கு மனுப்பண்ணினர் நீதிபதி அவர்களைப் பிணையில் விட்டனர். வழக்கு விசாரணை செய்யப்படுகிறதிலன்று இருவரும் வெளிப்படவில்லை. அவர்கள் இந்த ஆகஸ்ட்மீ பம்பாய்த் துறைமுகத்திலே கப்பலேறி ஜெனீவாவுக்குப் பிரயாணமாயினரென்று சொல்லப்படுகின்றது. இந்த விஷயத்தையிட்டுப் பாஞ்சாலம் லட்சுமணபுரி முதலான இடங்களில் அதிககிளர்ச்சி உண்டாயிருக்கிறது.

## சாட்சிகூறியபெண் கொலைசெய்யப்பட்டனள்.

ஹம்பகாவைச்சேர்ந்த மீகாவத்தையிலே மாட்டின் என்னுமொருவன் ஓர் பசுவைத்திருடினனென டெ யூர்ப்பொலிஸ் கோட்டில் பொலிசாரால் வழக்குத்தொடரப்பட்டான். அவன் தனக்குச் சாட்சி கூறும்பொருட்டுப் பாபுநோனா என்னும் ஒருபெண்ணைக் கோட்டுமூலமாக அழைத்தான். அப்பெண் கூறியசாட்சி குறித்த எதிரியாகிய மாட்டினுக்கு அநுகூலமாயிருக்கவில்லை. நீதிபதி அவ்வளவில் விசாரணையை நிறுத்தி வேறொருதினம் விசாரிப்பதாகத் தவணைகுறித்தனர். பாபுநோனா வீட்டுக்குச் செல்லும்போது குறித்த மாட்டின் அவளைத்தொடர்ந்து சென்று கடுமொழிகூறி அச்சுறுத்தினான். இரண்டாந்தவணை குறிக்கப்பட்ட தினமாகிய இந்த ஆகஸ்ட்மாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை அப்பெண் தனது புருஷனுடன் கோட்டுக்குச்சென்றபோது மாட்டின் என்பவன் பின்னாற்றொடர்ந்துசென்று அப்பெண்ணைப் படுகாயமுறக் குற்றிய பின் ஓடி மறைந்தான். குறித்த வழக்கிற் சம்பந்தப்பட்டுள்ள விதானை ஒருவர் இப்பெண் குற்றுயிராகக்கிடப்பதுகண்டு அவளை வைத்தியசாலைக்குக் கொண்டுபோயினர். அப்பெண் 23உ ஞாயிற்றுக்கிழமை இறந்தனள். மாட்டின்மறைந்து திரிகின்றான்.

## நான்கு ஆயுதபாணிகளின் அக்கிரமம்.

சென்றவியாழக்கிழமை மமாருவிலிருந்து எழுமைல் தூரத்துள்ள மனிங்காலா என்னும் கிராமத்திலே சாராயவெறிகொண்ட நால்வர் கத்தி பொல்லு முதலான ஆயுதங்களுடன் சென்று வழியிற் சந்தித்தவர்களுடன் கலகமிட்டார்கள். அங்குள்ள சனங்கள் தங்கள் வீட்டைவிட்டோடிப் பற்றைகளுள் மறைந்தார்கள். அந்தக் குடிகாரர் மீராலெவ்வை யென்னும் ஒருவருடைய தோட்டவாயிலிற்சென்று படலையை முறித்து உள்ளே புகுந்தார்கள்; அங்குள்ள காவற்காரனைத் துரத்தினார்கள் இருவர் அந்தக் காவற்காரனுடைய குடிசைக்குட் புகுந்து கதவை உடைத்து ஓர் பெட்டியை எடுத்தார்கள். காவற்காரனுடைய அரவங்கேட்ட மூவர் அங்கு விரைந்தோடினார்கள். பூஞ்சிமகே ஜேம்ஸ் என்னுங் கள்வனைத் துரத்திச் சென்றபோது கள்வனாற் படுகாயமுறக் குற்றப்பட்டான். கள்வன் பின்னரும் ஒருவனைத் துரத்திச் சென்றபோது துப்பாக்கியினாற் சுடப்பட்டான். கிராமவாசிகள் பலர் ஒருங்குசேர்ந்து அதிக கஷ்டத்துடன் குடிகாரரைப் பிடித்துக் கட்டியபின் பொலிசாரிடம் ஒப்புவித்தார்கள். காயப்பட்டவர்களில் ஒருவன் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுச் சிறிதுவேளையில் இறந்தனன். ஒருவன் படுகாயமடைந்தனன்.

## 1,298,000 பேருக்குத் தொழிலில்லை.

இங்கிலாந்திலே இப்பொழுது 1,298,000 பேர் வேலையில்லாது திண்டாடுகின்றனர்.

## திண்டுக்கலில் தண்ணீர்க்கஷ்டம்.

திண்டுக்கலிலே கிணறுகளிலுள்ள நீர் வற்றிப்போயது. குழாயிலிருந்து பெறப்படும் ஒரு குடந் தண்ணீர் ஒரு அணாவாக விற்கப்படுகிறதாம்.

## வேலைசெய்ய மறுத்து நிற்கும் கப்பல்வேலையாட்கள்.

ஆஸ்திரேலியாவிலே சிட்னித் துறைமுகத்தில் வேலைசெய்யும் தொழிலாளர் ஆயிரத்தைந்நூறுபேர் தமது வேதனம் குறைக்கப்பட்டமை காரணமாக இந்த ஆகஸ்ட் மாதம் 20உ வேலை செய்ய மறுத்து நிற்கின்றனர். ஐம்பது புகைக்கப்பல்கள் போக்குவரவின்றி நிற்கின்றன. மெல்போண் என்னுமிடத்திலும் இருநூறுபேர் வேலைசெய்ய மறுத்து நிற்கின்றார்கள்.

## பர்க்கென்கெட் அவர்கள் இங்கிலாந்தின் வாழ்வைப்பற்றிச் சொல்வது.

"நமது உயிர்நிலை போன்ற அடிப்படையான உண்மைகள் சில. அவை யாவரும் அறிந்த விஷயங்களே யாதலின், அவற்றைத் திரும்பத் திரும்பக் கூறுவது மிகையாகும் என்றாலும் அவை நமது உயிர்நிலை போன்றன வாதலின் பன்முறையும் கூறியே ஆகவேண்டும். நாம் பிறர் உதவியின்றி வாழ்வோரல்லர். பிறநாடுகளே நமக்கு உணவளிப்பவை. நாம உற்பத்தி செய்யும் கைத்தொழிற் பொருள்களை உலகத்தின் பல நாடுகளும் வாங்குமாறு நிர்ப்பந்திப்பதாலேயே நாம் உயிர் வாழ்கிறோம். இவ்விதம் நிர்ப்பந்தம் செய்வதில் நமக்குப் பலன் கிடைத்தாலன்றி நாம் அழிவடைய வேண்டியதுதான். நாம் உலகத்தின் ஓர் வல்லரசாக விருப்பதன் காரணத்தை இன்னோர் விதமாகக் கூறலாம். யுத்தத்திற்கு முன் ஏற்றுமதி வியாபாரத்தில் நாடுகள் போட்டிபோட்ட நிலைமைக்கேற்ப நாம் திருத்தி, ஏற்றுமதி வியாபாரத்தில் நாம் நல்ல நிலைமையையடைந்துள்ளோம். ஏற்றுமதி வியாபாரதால் கிடைக்கும் லாபத்தாலேயே நாம் ஜீவித்து வருகிறோம்." —லோ-ரி.

## ஒன்பதுமாச விளக்கமறியல்.

குருநாக்கற் பொலிஸ் நீதிஸ்தலத்திலிருந்து பாரப்படுத்தப்பட்ட மானபங்க வழக்கொன்று கண்டிச்சுப்பிறீம் கோட்டிலே விசாரணைசெய்யப்பட்டது. இதிலே எதிரி ஓர் இளைஞன். வழக்காளியான பெண்ணின் வயது பதினைந்து.

நீதிபதி—நெடுங்காலத்தின் முன்னே இக்குற்றச்சாட்டு நடைபெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வளவு தாமதத்துக்கும் காரணம் என்ன?

நியாயவாதி பார்பர்—சென்றமுறைநிகழ்ந்த சுப்பிறீம் கோட்டு விசாரணைக்கு இது வந்து தவணையிடப்பட்டது ஐயா?

நீதிபதி—எதிரி எவ்வளவுகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தான்?

மிஸ்டர் பார்பர்—ஒன்பதுமாசம்வரையில் ஐயா?

நீதிபதி—ஒன்பது மாசம் விளக்கமறியலிலிருந்திருக்கின்றான். நான் இதை ஒப்புக்கொள்ளல் முடியாது. இப்படிப்பட்ட வழக்குகளை நானே வந்து விசாரணைசெய்தல் வேண்டும். இந்தமாதிரியான சம்பவம் நிகழ்வதை உண்மையாகவே நான் ஒப்புக்கொள்ளல் முடியாது. முடிப்புறநியாய துரந்தரரே? இதை நீர் கவனிப்பீரா?

மிஸ்டர் பார்பர்—எதிரி பிணையிற் செல்வதற்கு வல்லபமில்லாதிருந்தான் என்று சொல்லப்படுகின்றது.

நீதிபதி—எதிரிமிகவும் இளைஞன். அவன் ஒருபோதும் ஓடிவிடமாட்டான். அவன் நீதிஸ்தலத்துக்குவரமாட்டான் அல்லது இலங்கையைவிட்டு ஓடிவிடுவான் என்றபயம் இருக்குமாயின், பிணை தேவை. பிணையின்தொகை கூடியளவு நியாயமாகவும் சிறுதொகையாகவும் இருத்தல் வேண்டும். ஒருவனின் வறுமை அவன் ஒன்பது மாசங்களுக்கு விளக்கமறியலிலிருப்பதற்குக்காரணமாயிருத்தல் நீதியாகாது. இது மிகக் கடுமையுள்ளதாகவே எனக்குத் தென்படுகின்றது. நிவிர்த்திசெய்யக் கூடாத பிழை நேர்ந்துவிட்டது. பதிவுகாரரே? இந்த விஷயத்தைக் குறித்து வைத்துக் கொண்டு எனக்கு ஞாபகமூட்டவும்.

## பகிரங்க வேலைப்பகுதியாரின் விளம்பரம்.

1925௵ கார்த்திகைமீ 1உ தொடக்கம் பின்னர்ச் சொல்லப்படும் டிஸ்திறிக்குகளுக்கு பகிரங்கவேலைப்பகுதியாருக்கு அரிசிகொடுக்க 1925௵ புரட்டாதிமீ 15உ செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் கொழும்பு அரசிறை வருமானத்தலைவர் கந்தோரில் ஒப்பந்தச்சங்கத்தலைவரால் ஒப்பந்தப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | மத்தியமாகாணம் தெற்கு | நுவரெலியா, தம்பளை, டிக்கோயாடிஸ்திறிக்குகளுக்கு 3, 6 அல்லது 12 மாதங்களுக்கு. |
| 2 | தென்மாகாணம் | அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக்கு 12 மாதங்களுக்கு |
| 3 | கிழ மாகாணம் | மட்டக்களப்பு டிஸ்திறிக்குக்கு 6 மாதங்களுக்கும், திருகோணமலைடிஸ்திறிக்குக்கு 12மாதங்களுக்கும் |
| 4 | வடமத்தியமாகாணம் | அநுராசபுர மிகுந்தலை டிஸ்திறிகளுக்கு 12மாதங்களுக்கு |
| 5- | ஊவாமாகாணம் | பஸ்சாறை, கோஸ்லாந்தை, பதுளை டியத்தலாவை டிஸ்திறிகளுக்கு12மாதங்களுக்கு |

வேறுவிபரங்களை 1925௵ ஆவணிமீ 21 திகதியைக்கொண்ட 7,479நொம்பர் இலக்கக் கசேற்பத்திரிகையில் காணலாம் அல்லது குறித்த மாகாண இஞ்சினியர் துரைமாரிடம் அறிந்துகொள்ளலாம்.

ச. டபிள்யு வர்த்தரோஷியஸ்,
பகிரங்க வேலைத்தலைவருக்காக.

பகிரங்கவேலைக்கந்தோர்,
கொழும்பு, 1925ஆ ஆகஸ்ட்மீ 26உ.
(G. 543.)

## நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்கம்.

நிகழும் குரோதன௵ ஆவணிமீ 1உ [16—8—25] மாலை 6 மணியளவில் ஸ்ரீ கா. கனகசபையவர்கள் அக்கிராசனத்தமர, நடந்த வாராந்தக் கூட்டத்தில் யோகானுபவ ஞான சங்கத்தைச் சேர்ந்த பிரமஸ்ரீ எம். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'பராபக்தி' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக்கொண்டு தீட்சை, இருவினையொப்பு, பராசக்தி என்பன வொரு பொருளன வென்றும், பிந்தியது ஐந்தாம் புருஷார்த்தமாக மதிக்கப்படவேண்டுமென்றும், ஆண் பெண் வித்தியாசம், திரிமூர்த்தி வித்தியாசம், சமயசாதி வித்தியாசங்கொள்ளல் தகாதென்றும், நம்மவர் ஸ்திரீகள் மோட்சமடையவேண்டியதில்லையென மதித்தப்போலும் அவர்களைக் கல்விகற்றல், பிரசங்க மண்டபங்களுக்குச் செல்லல், முதலியவற்றிலிருந்து தடுக்கின்றனரென்றும், இப்படி வைப்பதாற்றான் அவர்கள் பிரகாசிப்பதில்லையென்றும், தமயந்தி, சந்திரவதி, சாவித்திரி போன்ற கற்புடை மங்கையர் இக்காலத்து முளரென்றும், அவர்கள் கற்றல், கேட்டல், பழக்கம் முதலியவற்றினின்றும் நீங்கியிருப்பதால், அவர்கள் சரிதங்கள் வெளியாவதில்லையென்றும், ஆண்மக்களாகிய நம்மவர் இக்கொடிய செயலுக்குக் காரணராயிருத்தல் தகாதென்றும், சுயநன்மைக்காக உழையாது எல்லாருடைய நன்மைக்காகவும் உழைத்தல்வேண்டுமென்றும், இக்காலத்துள்ளார் யாதேனுமொன்றை எவரிடத்திருந்தாவது பெற்றுக்கொள்ள விரும்புகின்றனரன்றித் தாம் கொடுக்கவிரும்புகின்றிலரென்றும், சுயநன்மையைவிரும்பித் தாம்மாத்திரம் மோட்சமடைந்தாற்போதும் மற்றவர்களுடைய நன்மையையும் அத்தியாவசியகம் விரும்புதல் வேண்டும் என்றும், தன்னைத் தான் அர்ப்பணஞ் செய்தலே மோட்சம் என்றும், ஆதலினால் நாம் யாவரும் நம்மைக் கடவுளுக்கு அர்ப்பணஞ்செய்தல் வேண்டுமென்றும், இன்னும் இன்னோரன்ன இன்றியமையாத பலவற்றை நாம் செய்தல் வேண்டுமென்றும் கூறித் தம் உபந்நியாசத்தை முடித்தனர்.

பின் காரியதரிசி ஸ்ரீ ச. சம்பந்தர் அவர்கள் பிரசாரகர்க்கு நன்றியறிதல்கூறுதலும் ஆரம்பம்போலவே ஈற்றிலும் தேவார பாராயணத்தோடு கூட்டம் சமாப்தியாயிற்று. கடிதம்.

## காரைநகர்ச் செந்தமிழ் நான்மறைக்கழகம்.

"வேதம்; பசு: அதன்பால்: மெய்யாகமம், நால்வர்—ஓதுந்தமிழ் அதனினுள்ளுறு நெய்"— என்றபடி, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கும் பசுவாக வுருவகஞ் செய்யப்பட்டன. பசுவினுடைய தேகத்தில், எலும்பு, தோல், இரத்தம் முதலாய சத்த தாதுக்களே பெரும்பகுதியாயிருப்ப, இவற்றின் சாரமாகிய பாலமிழ்தம் சொற்பமாயிருப்பதாகும். இனிப் பசுவின் சரீரத்தின் கண்ணவான அச்சத்த தாதுக்களும் நமக்குப் பயன்படுதலின்றி அவற்றின் சாரமாகிய அமிழ்தமே நமக்குப்பயன் படுதலுடைத்தாம். அற்றே, வேதத்துள்ளுஞ், மாயாகுணவயப்பட்டவரான காரியமூர்த்திகளின் உபாசனையே பெரும்பான்மையுஞ் சொல்லப்பட்டு, காரணமூர்த்தியும் தத்துவங்களைக் கடந்தபராபரமுமான சிவோபாசனை சிறுபான்மை குறிக்கப்பட்டு, அது பேரின்பமுத்தியினை நமக்குப் பயப்பிக்குமாற்றானுடைத்தாயிருக்கின்றது. இங்ஙனம் நியத்த அநாதிபு

## இந்துக்களுக்காகிய பிரசங்கங்கள்.

"LECTURES TO HINDUS".

சென்ற சனிவாரம் (29-8-25) வெளிவந்த உதய தாரகை பத்திரிகையில், தமது 'சாதி சமயம் என்னும் இவற்றை விடுத்துக் கிறிஸ்த சமயத்திற் புகுந்த சுப்பிரமணியம் என்னும் பார்ப்பார்குலத்தைச் சேர்ந்த ஒருவர் வண்ணார்பண்ணை பிற்றர் வித்தியாசாலையிற் செய்த பிரசங்கத்தைப் புதினமாக வெளியிட்டபோது மேற்படி பத்திரிகையின் ஆங்கிலபாகத்து ஆசிரியர் அப்புதினத்திற்கு இந்துக்களுக்காகிய பிரசங்கங்கள் "Lectures to Hindus" என மகுடநாமமிட்டிருக்கிறார். குறித்த பத்திராசிரியர் இங்ஙனஞ் செய்தமைக்குக் காரணம் யாதெனத் தெரியவில்லை. இங்குள்ள இந்துக்கள் யாராயினும் இச் சுப்பிரமணியரைக்கொண்டு தங்கட்குப் பிரசங்கஞ் செய்வித்தல் வேண்டுமென்று கேட்டதுண்டா? இன்றேல் இப்பிரசங்கம் இந்துக்களாயுள்ளாருஞ் சென்று கேட்கத்தக்க ஒரு பொது ஸ்தானத்திற் செய்யப்பட்டதா? அச்சிட்ட பிரசங்க விளம்பரத்தில் "இந்துக்களுக்காகியபிரசங்கங்கள்" என்று வெளியிடப்பட்டிருக்கக் காணவில்லையே. இந்துக்களாற் சமயத் துவேஷி சாதித் துவேஷியென்று மதிக்கப்பட்டிருக்குமொருவருடைய வாயினின்று வரும் பிரசங்கத்தை இந்துக்களுக்காகிய பிரசங்கமென்று சொல்லுதல் முறையாகுமா? கிறிஸ்த குருவர்க்கத்தைச் சார்ந்த ஒருவர் அந்தச் சமயத்தை விடுத்து இந்து மார்க்கத்தை அநுசரித்துவந்து பிரசங்கஞ் செய்யும்போது அவருடைய பிரசங்கங்களைப்பற்றி யாம் இந்துசாதனத்தில் எழுதுங்கால் "கிறிஸ்தவர்கட்காகிய பிரசங்கங்கள்" (Lectures to Christians) என மகுடநாமமிட்டுவெளியிட்டால் அது உதயதாரகைப் பத்திராசிரியருக்கு விருப்பமாகவிருக்குமா? எக்கருமத்தைப் பிறர் உனக்குச் செய்யவொண்ணுதென விரும்புகின்றனையோ அக்கருமத்தை நீயும் பிறருக்குச் செய்யாதே என்ற அமுதவாக்கை நமது பத்திராசிரியர் இனியாயினும் மனத்திற் கொள்வாராக.

### காலநிலை.

சிலநாட்களாக இடையிடையே சிறுமழைத்தூற்றலுடன் ஆகாயம் முகில்களால் மூடப்பட்டிருந்தது. சென்ற சனிக்கிழமை தொடக்கம் ஆகாயம் சிறிதும் களங்கமின்றி விளங்குகின்றது. வெய்யிலின் உக்கிரம் அதிகம். கமக்காரர் மழையை எதிர்நோக்கியிருக்கின்றனர். மழையின்றி விதைக்கத்தகுந்த சில இடங்களில் நெல் விதைப்பு நடைபெறுகின்றது.

### பிரசங்கம்.

சென்றசெவ்வாய்க்கிழமை இரவு கோப்பாய் தெற்கு, கற்பகப்பிள்ளையார்கோவில் மண்டபத்திலே வேதாரணியம் ஸ்ரீமத் க செல்லையாக் குருக்களவர்கள் "ஆலய வழிபாடு" என்னும் விஷயமாகப் பிரசங்கஞ் செய்தனர்.

### இந்துசாதன காரியாலயக் கட்டடம்.

இந்த ஆவணியீ ௲ (21—8—25) சுக்கிரவாரத்தன்றிரவு ஒன்றரைமணியளவில் நிகழ்ந்த மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில் இக்கட்டடத்தின் அஸ்திவாரவேலை ஆரம்பித்து நடந்துவருகின்றது.

### எறிவெடியினால் மாண்டமை.

சிலநாட்களுக்குமுன் மதவாச்சியிலே அப்பா என்னும் ஒருவன் எறிவெடிமருந்துகளைச் சேர்க்கும்போது நெருப்புப்பற்றி எரிந்தனன். அவன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டு மறுநாள் இறந்தான். வேறும் இருவர் காயப்பட்டனர்.

### அறிவித்தல்.

புலோப்பளை புண்ணியர் சின்னையா பெண் (சிற்றம்பலம் மகள்) கதிராசிப்பிள்ளை ஆகிய நான் கையெழுத்துவைக்கத் தெரியாத கைநிருசரியா யிருப்பதாலும் எனது புருஷன் குறித்த சின்னையா என்னைவிட்டுப் பிரிந்திருப்பதாலும் எனது முதுசொமாயுள்ள ஆதனங்களுக்கு எனது சம்மதமின்றி எந்த கொத்தாரில் ஆவது அறுதி, ஒற்றி முதலிய யாதொரு சாதனமும் (அற்றேணி என்றுவது எனது கைத்திறைப் போட்டு) முடிக்கக்கூடாதென்று இத்தால் வெளியாக்கப்படுத்துகிறேன்.

இங்ஙனம்,
— கதிராசிப்பிள்ளை கைக்குறி.
28—8—25.

V. Chellappah,
Conductor
Tammekerny Estate,
Pallai.

## கடிதம்.

### பெரியோரைப் பேணல்.

(வண்ணார்பண்ணை
ஸ்ரீமதி க. நவரத்தின அம்மாள்
எழுதியது)

அன்பார்ந்த சகோதரிகாள்,

தற்காலம் நம்மில் அனேகர் பெரியோரைச் சிறிதாயினும் மதிக்கின்றாரில்லர். ஏனெனில் அவர்களும் அவர்களது வார்த்தைகளும் நாகரீகமற்றனவாகளாம். ஆங்கிலேயக் கல்வியினாலும் ஆங்கிலேயரது நடையுடை பாவனைகளாலுமே நாம் நாகரிகமடைந்தோமென எண்ணுகின்றனர். பெரியோரைப் பேணுவதால், கல்வி, கீர்த்தி, பலம், ஆயுள் என்பவை நன்கு விருத்தியாகுமென் றிருக்க அதனை விடுத்துக் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்றபடி, நாம் எண்ணியதே சரி, இவர்கள் பழையகாலத்து வழக்கங்களை இப்பொழுதும் உபயோகிக்கப்பார்க்கிறார்கள். அவற்றை இப்பொழுது உபயோகிக்கச் சரிவருமோ, யாவரும் நகைப்பார்களே என எண்ணுகிறோம். அவ்விதமன்று, நாம் ஒவ்வொருவரும பெரியோரின் சொல் மதிப்படி 'மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்' என எண்ணி நடப்போமாகில் நம்மை இகழ்வதற்கு யாரிருக்கின்றனர்? ஒருவருமிலர். இவற்றை உற்றுநோக்கி இதன்படி நடப்பதை விடுத்து, ஒருவன் என்ன செய்கிறானோ அதுபோல் நாமும செய்தல் அழகல்ல. கடவுள் நமக்கு எதற்காகப் பகுத்தறிவை யுதவினார். ஒவ்வொரு கருமத்தாலும் நன்மை விளையுமா தீமை விளையுமா என்று அறிந்து அதன்படி நடப்பதற்கல்லவா? நாம் அதனை விடுத்துக் கண்டதே காட்சி கொண்டதே கோலமெனத் திரிந்து, விழலுக்கிறைத்த நீர் போல் நம்பகுத்தறிவை உபயோகமற்றதாக்கலழகாகுமா? அன்று; அன்று. எவ்விதமேனும் நம் பகுத்தறிவைக்கொண்டு நல்வழி சேர்தலே நமக்கழகு. ஆதலால் சகோதரிகளே, பெரியோரைப் பேணுவதே நமக்கு நன்மை பயக்கும்.

நமக்கு வயதில் மூத்தவர்களே பெரியோர் என்பது மட்டுமல்ல. ஆனால் கடவுட் பக்தி, நல்லறிவு, நற்குண நற்செய்கைகள், கல்வி முதலியவைகளையுடையவர்களும் பெரியோராவர். இப்பேர்ப்பட்டவர்களையே நாமடைதல் வேண்டும்.

> கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
> நிற்க அதற்குத்தக;

என்னும் திருக்குறளின்படி நடப்பவர்களோடு, அவர்களையுபசரித்து அவர்களது புத்திமதிகளையும் நற்குணநற்செய்கைகளையும் பின்பற்றி நடப்போமாகில், நமக்கு இவ்வுலகில் ஓர் குறைவுமில்லையாம். அரிதிற் கிடைத்த பெரியோரையே துணைபாகவும் அவர்களது வார்த்தைகளையே மேனைமையாகவும் கொண்டு நடத்தல் வேண்டும். ஒருபோதும் வீண்காலம் போக்கலாகாது.

பெரியோரை யெப்பொழுதும் உபசரித்து அவர்களிடத்து நீதி நெறிகளையறிந்து அதன் வழியொழுகல் வேண்டும். நாம செய்யப்புகும் ஒவ்வொரு கருமங்களையும் பெரியோர்களின் உத்தரவின் மேலேயே செய்தல் வேண்டும். அவர்கள் மறுத்தாற் செய்தலாகாது. அவர்கள் என்னென்ன கூறுகிறார்களோ அதன்படி நடத்தலே நமக்கழகு. நமக்கு எவ்வளவு செல்வம், பலம் முதலியவைகளிருந்தபோதும் பெரியோரைப் பேணவிடின் அவைகளால் யாதொரு பயனுமடைய மாட்டோம். பெரியோர்களை முறைப்படி மன உருக்கத்துடன் உபசரித்து அவர்களின் கட்டளையின்படியே நடப்போமாகில், அவர்கள் நம்மேல்மிகவும் அன்புசெலுத்தி வாழ்த்துவார்கள். அவ்விதம் அவர்கள் நம் மேற் செலுத்தும் அன்பே நமக்கு இம்மை மறுமை யின்பங்களையளிக்க வல்லதென்றால், அவர்களது மகிமையைக் கூற நம்மாலாகும ? இம்மை மறுமை யின்பங்களையடையவேண்டிய வழிகளைத் தேடுவதே நமது செயலாம்.

ஒருவன் எவ்விதபுத்திமானாயிருந்தபோதும், பெரியோருடைய வாக்கை அலட்சியம் செய்தலாகாது. பூமி முழுவதும் ஆளும் அரசனும் பெரியோரைத் துணைக்கொண்டு அவர்களது புத்திமதியை அங்கீகரிக்கிறான். அவ்விதம் நாமும் என் செய்தலாகாது பின்பற்றக்கூடிய இவ்விதக் காரியங்களை விடுத்து ? அத்தியர் நாகரீகத்தையே பெரிதெனவெண்ணிக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவதால் நாம் ஒரு பயனும் அடையப்போகிறதில்லை. பெரியோரையடைந்தும், அவர்களது புத்திமதிப்படி நடப்பதும் இவ்வுலகில் நாமடையக் கூடிய பயன்களுளொன்றாம். இன்றேல் இம்மை மறுமை யின்பங்களை எளிதிலடைய மாட்டோம்.

ஆதலால் சகோதரிகளே, நாம் எப்பொழுதும் பெரியோரின் அனுசரணையிலேயிருத்தல் வேண்டும். நாம் மாறுபட்டு பிறவி யெடுத்ததின் பயன் பெரியோரையடைந்து அவர்களுக்குத் தொண்டுசெய்து, அவர்களது வார்த்தைக்கெதிர் வார்த்தை பேசாது கீழ்ப்படிந்து நடந்து நல்வழியடைவதின் மார்க்கத்தைத் தேடுவதற்கேயாம். இங்ஙனம் பெரியோரைப் பேணி நடப்பவர்கள் பலவிதத்தாலும் நன்மையடைந்து இம்மையிற் புகழையும், மறுமையில் மோட்சத்தையும் அடைவதற்கையமில்லை. இனி மேலாவது நாம் பெரியோரையலட்சியம் செய்யாது நடப்பதற்கும் அவர்களது மகிமையை அறிவதற்கும், எல்லாம் வல்ல இறைவன் நம்மை எல்லாருக்கும் அருள் புரிவாராக.

## சந்திரபல மறியும் வகையும் செய்யுங்கருமங்களும் பரிகாரமும்

அவரவர்கள் ஜெனனமான சந்திரலக்கினத்திற்கு உத்தராயண, தக்ஷணாயன, பிரவேச வருடப்பிரவேச, மாதப்பிரவேசகாலங்களில் சந்திரன் கோசரப்படி சுபஸ்தானங்களாகிய 1, 3, 6, 7, 10, 11 இந்தஇடங்களில் சுபக்கிரக நோக்குச்சம்பந்தப்பட்டு இருந்தால் அந்த அயனம, வருஷம், மாசம், முழுவதும் சந்தோஷத்தை அடைவார்கள்.

வேறு பிரகாரம், வளர்பிறை ஆரம்பத்தினத்தில் அவரவர்களுடைய சந்திரலக்கினத்திற்கு, கோசரப்படி சந்திரன் அநுகூலமான ஸ்தானங்களில் அதாவது 1, 3, 6, 7, 10, 11-ல் இருந்தால் அவர்களுக்கு அந்தப்பட்சம் முழுதும் நன்மையாகவே இருக்கும். தேய்பிறை ஆரம்பதினத்தில் சந்திரன், 2, 4, 5, 8, 9, 12ல் இருந்தால் நன்மையைத்தருவான். வளர்பிறையில் சந்திரன் 2, 5, 9 ல் இருக்கும் பொழுது அவனுக்கு நாலாமிடத்தில் வேறு கிரகங்கள் இல்லாதிருந்தால் அச்சந்திரன சுபமுடையனாய் நல்லபலனைக் கொடுப்பனென்றறியத்தக்கது.

வசிஷ்டசம்மிதையின்படி சகல மிருகசாதிகளுக்கும் சிங்கமானதெப்படி அதிகபலமுடையதோ அப்படியே எல்லாகிரகபலன்களுள்ளும் சந்திரபலம் அதிகம் சிறப்புடையதாம். எனவே சந்திரன ஒருவனே பெலனாகயிருந்தாற்போதும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையாற்றான் சாசோதிமாலையில் "பொங்கியமனத்தோடொத்த புலனெனவுரைகலாமால், மங்கையேயாதலாலே மதியமே வலிபதாமே" என்றார். எனவே மனத்துடன் வசப்பட்ட புலனால் எவ்வாறு தத்துவஞானமாகிய இன்பமுண்டாகுமோ அவ்வாறே சந்திரன் சுபனாயிருக்குங்காலத்தில் செய்யப்படும் கருமங்களும் இன்பமயமாக நன்மையைத்தருமென்பது கருத்தாம். எனவே பஞ்சப்புலன்களின்வழியே மனம்சென்றால் துன்பமுண்டென்பதும் பஞ்சப்புலன்களையும் அடக்கி மனம் ஒரேவழி நின்றால் இன்பமுண்டென்பதும் பெறப்படுகின்றது. முற்கூறிய 2, 4, 5, 8, 9, 12 இந்தச் சந்திரயோகஸ்தானங்களிற் புதன் தவிர வேறுகிரகங்கள் ஒருவரும் இல்லாதிருத்தல்வேண்டும். அப்படி இருந்தாற்றான் சந்திரன் சுபனாவன். புதன் மதிமகனானபடியால் வேதைஸ்தானங்களிலிருப்பினும் குற்றமில்லையென்பது கருத்து. விதானமாலையின்படி சந்திரன் (1)ல் இருந்தால் ஐந்தாமிடமும், மூன்றிலிருந்தால் ஒன்பதாமிடமும், ஆறாமிடமிருந்தால் பன்னிரண்டாமிடமும், ஏழாமிடமிருந்தால் இரண்டாமிடமும், பதினொராமிடமிருந்தால் எட்டாமிடமும், பத்தாமிடமிருந்தால் நான்காமிடமும் சுத்தியாக இருக்கவேண்டுமெனக் கூறப்பட்டிருக்கின்றது. சந்திரன சுபமுடையவனாய் ஜென்மத்திருந்தாலும் பிரயாணம், யுத்தம், விவாகம, சௌளம், கிரகப்பிரவேசம் ஆகிய இந்த ஐந்து கருமங்களுஞ் செய்யக்கூடாது. சந்திரபலம் இல்லாதநாட்களில் அவசியம் சுபகருமங்கள் செய்யவேண்டுமேயானால் அத்தோஷபரிகாரத்தின் பொருட்டு வெள்ளைவஸ்திரம் வெள்ளைப்பசு, பால்நிறைந்தசங்கு, வெள்ளியிற்செய்த சந்திரப்பிறை, இவற்றிலொன்றைத் தம்மியல்புக்குத்தகச் சற்பிராமணர்களுக்குத் தானங்கொடுத்துப் பின் சுபகருமங்களைச் செய்க. கோரோசனை, கஸ்தூரி, சந்தனம், தாமரைப்பூ இவற்றைத் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி சங்கினால் அத்தண்ணீரை எடுத்து ஸ்நானஞ்செய்தால் சந்திரதோஷம் பரிகாரமாகுமென்றுமொருமுறையுள்ளது.

இங்ஙனம்,
ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோவில்,
சுதுமலை.

## இக்கால வியாதிகளும் மருந்துகளும்.

இந்தியா, ஈழம் என்னும் இவ் விருதேசங்களிலும் அக்காலத்திருந்தவர்கள் தேச சீதோஷணத்திற்கு ஏற்றவாறு ஆகாரம்புசித்தும் உடைதரித்தும் வந்தார்கள். அதனாலவர்கள் நோயற்றவர்களாய் வாழ்ந்ததோடு நீண்ட ஆயுளோடுமிருந்தார்கள். பிறந்ததுமுதல் மரணகாலம் வரையும் மருந்தென்பது இன்னதென்றறியாதவர்களாய் அனேகரிருந்தார்கள். அவ்வகுப்பினருள் இன்னுஞ் சிலரைப் பாட்டியும் பாட்டனுமாயிருக்கக்காணலாம். இதற்குக் காரணம் அவர்களது ஒழுங்கான ஆகாரத்திட்டமும், மெய்வருந்தும்படி உழைத்துவந்த சுறுசுறுப்பான கருமமுமன்றி வேறன்று. ஆனால் அக்காலத்தும் வியாதிகளும் வைத்தியர்களுமே இல்லையென்று சொல்லிவிட முடியாது. இருந்தும் ஆடம்பரமற்ற உண்மைவைத்தியர்களாய் இலைமறைகாய்போலிருந்தார்கள். அவர்களால் சுகப்படுத்தமுடியாது கைவிடப்பட்ட வியாதிகளுமில்லை. அத்தகைய பிரயோசனமற்ற போலிமருந்துகளைச் செய்துவிற்க உடன்பட்டவர்களாயுமில்லை. ஒவ்வொருவருடைய தேகசுபாவம் நாடிப்பரிசை நோயின் குணம் ஆகியவற்றை நன்கறிந்து தகுந்தபடி நோய்களைக் கண்டித்து வந்தார்கள். ஆனதுபற்றி நோய்களும் மிகுதியாயிருக்கவில்லை. வைத்தியர்களும் இருக்குமிடந்தெரியாதுபோலிருந்தார்கள்.

அந்நிய நாகரிகம் தலைவிரித்தாடும் இக்காலத்தில் ஆகாரமுறைகளும் உடைநடை பாவனைகளும் மாற்றமடைந்தன. அதன்பயனாக வாகடத்திலில்லாத அனேகவியாதிகள் பரவியிருக்கின்றன. வைத்தியர்களின் தொகை அதிகப்பட்டு வருகின்றது. சிகிச்சாசாலைகளும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏது இருந்தென்ன? 'எண்ணெய்ச்செலவேயொழியப் பிள்ளை வளர்ந்தபாடில்லை' என்றபடி வைத்தியர்களும் வைத்தியசாலைகளும் பெருகியதேயல்லாது நோய்கள் தீர்ந்து சுகமடைந்தபாடில்லை. இதெல்லாம் பண்டையசுகாதாரமுறைகளைக் கைவிட்டதினாலேயேயாம். சீதளமிருந்தசில தேசவாசிகள் உஷ்ணபதார்த்தங்களை விரும்புவது யாவருமறிந்ததே. அதுபோலவே வெப்பமிருந்த நம் தேசத்தில் குளிர்ச்சிதரும் பதார்த்தங்களைப் பாவிப்பது சாலவும் பொருத்தமானது.

தற்காலம், அதெல்லாம் மாறுபட்டு அந்நியதேச ஆகாரங்களும் நடையுடை பாவனைகளுமே சாலச்சிறந்தனவென வெண்ணிவிட்டனர். இந்தமுறைகடந்த பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் ஆங்கிலங்கற்று அந்நியரைப் பின்பற்றுவோரிடத்திலேயே மலிந்திருக்கின்றன. அதி மான வைத்தியசாலை ஸ்தாபனங்களுக்கும் இவ்வுத்தமர்களே உதவிபுரிந்துவருகின்றனர். பொதுவாக முற்காலத்திற் கிராமங்கடோறும் வைத்தியத்திற் றேர்ந்த மருத்துவப்பெண்களிருந்தனர். அவர்களைக்கொண்டே பிரசவஸ்திரீகளைச் சுருக்கமான செலவிற் கவனிக்கப்பட்டது. இலகுவில் நோயை மாற்றக்கூடியதும் சீர பெலனளிக்கத்தக்கதுமான பச்சிலைமூலிகைகளும் கடைச்சரக்குகளுமே பிரசவஸ்திரீகளுக்கு உதவப்பட்டன. அதனாலவர்கள் சரீரதிடகாத்திரராகவும் தங்கள் நித்திய கருமங்களில் ஊக்கங்குன்றாதவர்களாகவும் ஆயுட்காலவரையும் தளர்ச்சியுறாதிருந்தனர். அந்தோ! இக்காலத்தில் சேவகாவிருத்தியால் வரும் ஊதியத்தைக் கௌரவமாக எண்ணுஞ் சிலர் தங்கள் மனைவியர்களைப் பிரசவகாலத்தில் பெருந்தொகைப் பணத்துடன் வைத்தியசாலைக் கனுப்பிவிடுகின்றனர். அங்கேயவர்களுண்ணும் மருந்தும் ஆகாரங்களும் மேலைத்தேசத்தை யொட்டியனவாதலால் முன்னிருந்த சுத்த உதிரமும் தேக திடமுங்கெட்டுப் பற்பல நோய்களுக்கும் அவர்கள் ஆளாகி வருந்துகின்றனர்.

ஒருமுறை வைத்தியசாலைக்குச்சென்ற ஆண்பெண் எவரும் அவர்கள் சீவிய காலவரையும் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர் இவ்விதமாய் மருந்துண்ணச் செல்லும் பிணியாளர் தொகை அதிகப்படுவதுபற்றி "இவ்வைத்தியசாலையிற் கொடுக்கப்படும் மருந்தின் விசேடத்தினாலும் வைத்தியரின் பரிசோதனைத் திறமையாலுமன்றோ சனங்கள் ஓய்வின்றிக் கூட்டங் கூட்டமாகச் சென்று மீள்கின்றனர்" என்று அனேகர் பெரு மகிழ்ச்சியடைகின்றனர். இதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டின. அதாவது மருந்தின் குணமும் வைத்தியரின் திறமையும் ஒத்திருக்குமாயின் நாளுக்கு நாள் நோய்கள் நீங்கிச் சுகங்காண்பதன்றோ முறை? அதுவுமன்றி ஒரு வியாதிக்கு மருந்துண்ண அதிலிருந்து புதிய புதிய வியாதிகளெல்லாம் உற்பத்தியாகும்பொழுது இந்த வைத்தியசாலைகளை மெச்சுவதெங்ஙனம்?

எவ்வளவுக்கெவ்வளவு தொகையான மருந்துகள் இங்குவந்து இறக்குமதியாகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு வியாதிகளும் பெருக்கமடைந்தே வருகின்றன. ஆகையால் பலவேறு வியாபாரதந்திரங்களில் இதுவுமொன்றென்றே கருதவேண்டும். இதுமட்டுமல்ல, மருந்துகளின் வியாபாரம் இங்ஙனமிருக்க, ஒவ்வொரு வைத்தியசாலை முகப்பிலும் அநேகஞ் சுதேசிக் கடைகள் காத்துக்கொண்டிருக்கின்றன அவைகள பெயரளவில் சுதேசியாகவும் அவற்றில் விற்கப்படும் பொருட்கள் யாவும் "மெலின்ஸ்பூட்," 'நெசில்ஸ் மில்க்,' 'மோல்டெட் மில்க்,' 'அலன்பரிஸ் பூட்', 'பார்லி', 'அரோருட்', 'பௌரில்', 'விரோல்' முதலிய அந்நியதேச உணவுப் பொருட்களாகவே யிருக்கின்றன. வைத்தியசாலையிலுள்ள மருந்துகள் நோய்களைக் கண்டித்ததுபோற் பாவனைகாட்டி [illegible] அனேக கொடிய வியாதிகளையும் உற்பத்தி செய்து அதன் மூலமாய் ஏராளமான மருந்துகளையும் உணவுப்பொருட்களையும் விலையாக்கி லாபத்தை மேல்நாட்டுக்கு அனுப்பிவருகின்றன. பெருமை பொருந்திய சுதேச வைத்தியம் நாளுக்கு நாள் க்ஷீணித்துவருகின்றது. சிறிது தலையிடித்த வருத்தங்களிலும் அதைக்கவனம்பண்ணி ஆதரிப்பாரில்லை சாதாரணமாய் ஓர் வியாதியஸ்தரை வந்து பார்க்கும்படி ஆங்கில வைத்தியரை அழைப்பதாயின் அவர் வருவதற்கு மோட்டர்வண்டி அல்லது குதிரைவண்டி வேண்டும் அவர் கொடுக்கும் மருந்துக்கிரயமும் காணிக்கையும் மனக்குளிரக்கொடுக்கவேண்டும். சுதேச வைத்தியர்களுக்கோவெனில் யாதொரு வாகனங்களுந் தேவையில்லை பாதசாரிகளாகவே சென்று அற்ப கூலியுடன், அன்றி அதுவுமில்லாது மனமகிழ்ச்சியுடன் திரும்புவர். இதிலிருந்து ஆங்கில வைத்தியருக்கும் சுதேச வைத்தியருக்குமுள்ள மதிப்பையறிந்து கொள்ளலாம். இவ்விதமயக்கங்கள் நீங்கி நம் ஆயுர்வேத வைத்தியத்தை ஆதரிக்காலன்றிக் கொடிய வியாதிகள் நமைப்போலத்திலில்லை வியாதிவாராமல் தடுத்துக்கொள்ளவும் வந்தவியாதியை இலகுவில் தீர்த்துக்கொள்ளவும் கூடிய முறைகள் ஆயுர்வேதவைத்தியத்திலேயேயிருக்கின்றன.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய தற்றது போற்றி யுணின்." (உத்தரவேதம்.)

க. ச. தளையசிங்கம்.

## ஆசிரியர் தேவை.

கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைக்கு இரண்டாம் வகுப்புத் தராதரப்பத்திரம் பெற்ற ஒரு உபாத்தியாயர் தேவை. வேண்டிய விபரங்களை எம்மிடத்தில் நேரிலேனும் காகிதமூலமாகவேனும் அறிந்துகொள்ளுதலாகும்.

ச. கந்தையா,
ஷை வித்தியாசாலை மானேஜர்.

கொக்குவில்-மேற்கு,
26—8—25
(Mis. 701)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.
(M. 37)

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
அ பி. வல்லுவெட்டித்துறை. (H. 37.)

## "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க சமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
S. இந்தியா.
(H 40)

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.
(H 32

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி செங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வளைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம், தென்இந்தியா.
(H. 41.)

## பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

## யாழ்ப்பாணஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கத்தின் ஏழாம் வருஷாந்தக்கூட்டம் 1925ஆ ஆவணி மீ 29உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் மேற்படி சங்க "மகாமண்டபத்தில்" நடைபெறும். அத்தருணம் 1925ஆ ஆனி மீ 30உ முடியவுள்ள வருஷாந்தக்கணக்கும், நிருவாககர்த்தர்களின் அறிக்கைப் பத்திரமும் அங்கீகரிக்கப்படும். வேறும் சங்கத்திற்கு ஆகவேண்டிய விஷயங்களும் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படும்.

18-8-25
(Mis 697)
ச. ஆறுமுகப்பிள்ளை,
காரியதரிசி

## விளம்பரம்.

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் அப்புரவாக வேலைசெய்த முரசு குத்தி செங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக்கொடி, கால்தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமைப் வயிரக்கப்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

ஈ. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.
(H. 39)

## ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று.

என்று திருவானைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினார்.

4-வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டை காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ராஸி"னுப யோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.
(Y. 35. A)

## ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா'வைப்பற்றி என் அநுபவத்தைக்கீழேகுறிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறொன்றுமில்லையெனத்திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" ஞாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவனாய் தந்தி மூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றும்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாலுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினால் ஆபரேஷனில்தான் நிவர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது எனறு காக்கினாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினீயர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.
(Y. 35. B)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47.)

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகை நூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.
Y. 39).

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியததைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டுக்களப்பு,
சிலோன்.
(M. 36.)

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேக ஔஷதங்களெனத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ள நாளும் மறவாதது.

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது

பழனி, சி. எம். சாமி

# குரு தாம்ர பஸ்பம்.

முப்பூவினால் சுருக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ்செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணந் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியந் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது இது சகல வியாதிகளையும் வேரறுக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர் முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும்சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செபமேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10.

ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஜ் பிரதியேகம்.

நற்சாட்சி.

திரேகமெல்லாமிருந்த மேகப்பத்துகள் இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த ஆறாத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K பழனியாண்டிப்பிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

தங்கள் தாமிரபஸ்பம் 64 வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்ட ரோகம் குணமாயிற்று. சரீரத்திலுள்ள மேக நோய்கள் நீங்கி பாதத்தில்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்த குன்மம்) 6 வேளையில் குணமாயிற்று. இன்னும் 80 வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி. நாராயணபிள்ளை, சப் போஸ்மாஸ்டர், சர்ச்சில் ரோட், றங்கூன். 4-11-24.

## நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!
புதியபலத்தைக்காட்டும்!
ஒருமுறை பரீட்சிக்கவும்!

ஆச்சரியகுணமுள்ளது!
போனபலத்தை மீட்கும்!
அதை இன்றே பார்க்கவும்.

இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி உண்டாகும் வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வின் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

120 குளிகை ரூபா 10 60 குளிகை ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை 2. வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. இ. மு. இப்ராய்ஸா 8-1-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மத கோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் இரத்தத்தைச் சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரியத்தையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3 ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.
(Q. 64 A)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன் கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.